## இடைப்பாடி நகராட்சி

## 25.01.2023–ம் தேதியில் நடைபெற்ற நகர்மன்ற  சாதாரண கூட்ட நடவடிக்கைகளின் விபரம்

பொருள் 1

இடைப்பாடி நகராட்சி 2021–2022 ஆம் ஆண்டு நிர்வாக அறிக்கையினை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பிட மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்ககப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:**

மேற்காணும் இந்நகராட்சி 2021–2022 ஆம் ஆண்டு நிர்வாக அறிக்கையை பார்வையிட்டு மன்றம் பதிவுசெய்யலாம்.

(ந.க.எண். 0196/2023/சி1)

| தீர்மான எண்:296 | நாள். 25.01.2023 |
|---|---|
| அலுவலக குறிப்பு மன்றம் பதிவு செய்யப்பட்டது | |

பொருள் 2

இந்நகராட்சிக்கு சொந்தமான வெள்ளாண்டிவலசு பொது நிதி கடை எண்.1–க்கு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 28.12.2022ந் தேதி கோரப்பட்டது. மேற்கண்ட கடைக்கு ஏலம் கோர எவரும் முன்வராத நிலையில் தலா இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதன் ஒப்பு நோக்குப்பட்டில் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | கடையின் விபரம். | உச்ச ஏலம்/ உச்ச ஒப்பந்தப்புள்ளி கோரியவர்களின் பெயர்மற்றும் முகவரி. | பழைய வாடகை | உச்ச ஏலக் கேள்வி. | உச்ச ஒப்பந்தப் புள்ளி கேள்வி. |
|---|---|---|---|---|---|
| 1. | 2. | 3. | 4. | 5. | 6. |
| 1. | வெள்ளாண்டிவலசு பொது நிதி கடை எண்.1. | திருமதி.கு.ஜெயசந்திரா த/பெ.குப்புசாமி, 161,புதியதெரு2, இடைப்பாடி. | ரூ.1214 | –– | ரூ. 1500 |
| 2. | வெள்ளாண்டிவலசு பொது நிதி கடை எண்.1. | திரு.எஸ்.பாலமுருகன் த/பெ.சேட்டு,வெள்ளாண்டிவலசு புதிய தெரு, இடைப்பாடி. | –– | –– | ரூ. 1200 |

**அலுவலககுறிப்பு:**

மேற்கண்ட கடை பொது நிதி கடை எண்.1க்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளி கேள்விகளில் வரிசை எண்.1ல் உச்ச ஒப்பந்தப்புள்ளி கேள்வி கோரிய திருமதி.கு.ஜெயசந்திரா த/பெ.குப்புசாமி , என்பவரின் ஒப்பந்தப்புள்ளி கேள்வியானது மற்ற ஒப்பந்தப்புள்ளி கேள்வியை விட அதிகமாக உள்ளது. மேலும் இக்கடைக்கு செலுத்தி வந்த பழைய வாடகையை விட அதிகமான உள்ளதால் இவ் உச்ச ஒப்பந்தப்புள்ளி கேள்வியை மன்றம் ஏற்கலாம். அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று உச்ச ஒப்பந்தப்புள்ளிதாரருக்கு கடையினை ஒப்படைப்பு செய்தமைக்கும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.1014/2019/பி4)

| தீர்மான எண்:297 | நாள். 25.01.2023 |
|---|---|
| அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது | |

## பொருள் 3

இந்நகராட்சிக்கு சொந்தமான வாரச்சந்தை அருகில் ஐ.ஜி.எப்.எப். திட்டம் மூலம் கட்டப்பட்டு தற்போது காலியாக உள்ள கடை எண்.7,14 ஆகிய இரு கடைகளுக்கு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 28.12.2022ந் தேதி கோரப்பட்டதில் ஏலம் கோர எவரும் முன்வராத நிலையில் கடை எண்.7–க்கு தலா இரண்டு ஒப்பந்தப்புள்ளி கேள்விகள் பெறப்பட்டதன் ஒப்புநோக்குப்பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | கடையின் விபரம் | உச்ச ஏலம்/உச்ச ஒப்பந்தப்புள்ளி கோரியவர்களின் பெயர் மற்றும் முகவரி. | பழைய வாடகை | உச்ச ஏலக்கேள்வி. | உச்ச ஒப்பந்தப்புள்ளி கேள்வி |
|---|---|---|---|---|---|
| 1. | 2. | 3. | 4. | 5. | 6. |
| 1. | வாரசந்தை ஐ.ஜி.எப்.எப். கடை எண்.7 | திரு.எ.கணேசன் த/பெ.அடக்கத்தியான், 38ஜி.எல்லக்கா வளவு, ஆலச்சம்பாளையம், இடைப்பாடி. | ரூ.4000 | –– | ரூ.1600 |
| 2. | வாரசந்தை ஐ.ஜி.எப்.எப். கடை எண்.7 | திரு.ஜி.கார்த்தி த/பெ.கணேசன், எல்லக்கா வளவு, ஆலச்சம்பாளையம், இடைப்பாடி. | –– | –– | ரூ. 1400 |

**அலுவலககுறிப்பு:**

மேற்படி கடை எண்.7–க்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளி கேள்விகளில் வரிசை எண். 1ல் உச்ச ஒப்பந்தப்புள்ளி கேள்வியாக கோரிய திரு.எ.கணேசன் த/பெ.அடக்கத்தியான் என்பவரின் உச்ச ஒப்பந்தப்புள்ளி கேள்வி மற்ற ஒப்பந்தப்புள்ளி கேள்வியை விட அதிகமாக உள்ளது.மேலும் இக்கடைக்கு கடந்த இரண்டு ஆண்டு காலமாக ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியும் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர எவரும் முன்வராத நிலையில் நகராட்சிக்கு ஏற்படும் நிதியிழப்பை கருத்தில் கொண்டு இவ் உச்ச ஒப்பந்தப்புள்ளி கேள்வியை மன்றம் ஏற்கலாம். அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று உச்ச ஒப்பந்தப்புள்ளி கேள்வி கோரியவருக்கு கடையினை ஒப்படைப்பு செய்தமைக்கு மன்றம் அங்கீகாரம் வழங்கலாம்.
(ந.க.எண்.1287/2022/பி4)

| **தீர்மான எண்:298** | **நாள். 25.01.2023** |
|---|---|
| அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது | |

## பொருள் 4

இந்நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையம் அருகில் கட்டப்பட்டுள்ள ஜெ.ஜெ.வணிக வளாக டுபிட்கோ திட்ட கடை எண்.66,67 ஆகிய இரு கடைகளுக்கு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 28.12.2022ந் தேதி கோரப்பட்டது. மேற்கண்ட கடைக்கு ஏலம் கோர எவரும் முன்வராத நிலையில் கடை எண்.66,67 ஆகிய இரு கடைகளுக்கு தலா இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதன் ஒப்புநோக்குப்பட்டில் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | கடையின் விபரம். | உச்ச ஏலம்/ உச்ச ஒப்பந்தப்புள்ளி கோரியவர்களின் பெயர்மற்றும் முகவரி. | பழைய வாடகை | உச்ச ஏலக் கேள்வி. | உச்ச ஒப்பந்தப் புள்ளி கேள்வி. |
|---|---|---|---|---|---|
| 1. | 2. | 3. | 4. | 5. | 6. |
| 1. | TUFIDCO கடை எண்.66 | திரு.எம்.உறிகரன் த/பெ.முத்து, பவானி ரோடு, இடைப்பாடி. | ரூ.1575 | –– | ரூ. 1300 |
| | TUFIDCO கடை எண்.66 | திரு.எஸ்.முருகன் த/பெ.சுப்பிரமணி, காட்டுவளவு தெற்குத்தெரு, இடைப்பாடி. | –– | –– | ரூ.1630 |
| 2. | TUFIDCO கடை எண்.67 | திரு.எம்.மணிவண்ணன் த/பெ.முருகன், ஆலச்சம்பாளையம் | ரூ.1580 | –– | ரூ.1650 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | வடக்குத்தெரு, இடைப்பாடி. | | | |
| | TUFIDCO கடை எண்.67 | திரு.ஜி.வீரமணி, கல்லபாளையம், இடைப்பாடி. | —— | —— | ரூ. 1300 |

**<u>அலுவலககுறிப்பு:</u>**

அ) பேருந்து நிலைய ஜெ.ஜெ.வணிக வளாக டுபிட்கோ கடை எண்.66—க்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளி கேள்விகளில் வரிசை எண்.2ல் உச்ச ஒப்பந்தப்புள்ளி கேள்வியாக கோரிய திரு.எஸ்.முருகன் த/பெ.சுப்பிரமணி என்பவரின் ஒப்பந்தப்புள்ளி கேள்வியானது மற்ற ஒப்பந்தப்புள்ளி கேள்வியை விட அதிகமாக உள்ளது. மேலும் மேற்படி கடைக்கு செலுத்தி வந்த வாடகையை விட உச்ச ஒப்பந்தப்புள்ளி கேள்வி கூடுதலாக உள்ளதால் இவ் உச்ச ஒப்பந்தப்புள்ளி கேள்வியை மன்றம் ஏற்கலாம்.அவசர அவசியம் கருதி நகர மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று உச்ச ஒப்பந்தப்புள்ளி கேள்விதாரருக்கு கடையினை ஒப்படைப்பு செய்தமைக்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ஆ) பேருந்து நிலைய ஜெ.ஜெ.வணிக வளாக டுபிட்கோ கடை எண்.67—க்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளி கேள்விகளில் வரிசை எண்.1ல் உச்ச ஒப்பந்தப்புள்ளி கேள்வியாக திரு.எம்.மணிவண்ணன் த/பெ.முருகன், என்பவரால் கோரப்பட்ட உச்ச ஒப்பந்தப்புள்ளி கேள்வியானது மற்ற ஒப்பந்தப்புள்ளி கேள்வியை விட அதிகமாக உள்ளது. மேலும் மேற்படி கடைக்கு செலுத்தி வந்த வாடகையை விட அதிகமாக உள்ளதால் இவ் உச்ச ஒப்பந்தப்புள்ளி கேள்வியை மன்றம் ஏற்கலாம். அவசர அவசியம் கருதி நகர மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று உச்ச ஒப்பந்தப்புள்ளி கேள்விதாரருக்கு கடையினை ஒப்படைப்பு செய்தமைக்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண்.43/2022/பி4)

| தீர்மான எண்:299 | நாள். 25.01.2023 |
|---|---|
| அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது | |

**<u>பொருள் 5</u>**

இடைப்பாடி நகராட்சியின் ஈப்பு வாகனம் எண். TN52R1779-ன் பேட்டரி பழுது ஏற்பட்டுவிட்டதால் SKS India Private Limited, Salem நிறுவனத்தின் மூலம் புதிய பேட்டரி மாற்றப்பட்டமைக்கு பட்டியல் எண்.RO23V001379, நாள்.09.01.2023ன் படி தொகை ரூ.8022/— யை திரு.கே.பெரியசாமி, ஓட்டுநர் அவர்கள் வழங்கியதை திரும்ப கோரியுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும், மேற்காணும் தொகையை அண்ணாருக்கு திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு:</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவினத் தொகை ரூ.8022/—யை திரு.கே.பெரியசாமி, ஓட்டுநர் அவர்களுக்கு திரும்ப வழங்கலாம்.

(ந.க.எண்.851/22/இ2)

| தீர்மான எண்:300 | நாள். 25.01.2023 |
|---|---|
| அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது | |

**<u>பொருள் 6</u>**

இந்நகராட்சிக்கு எதிராக சேலம் தொழிலாளர் நீதிமன்றம், மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சேலம் மாண்பமை உயர்நீதிமன்றம் சென்னை ஆகியவற்றில் நடைபெற்று வரும் வழக்கு மற்றும் புதியதாக நகராட்சிக்கு எதிராக தொடரக்கூடிய வழக்குகளுக்கு அரசு வழக்கறிஞர் வழக்கை ஏற்று நடத்துவதற்கு ‘அ2 ‘ இருக்கை பிரிவுக்கு வழக்கு கட்டணம் வழங்கிட ஜனவரி 2023 முதல் டிசம்பர் 2023 வரை உத்தேச செலவினத்தொகையாக ரூ.100000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு:</u>** மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.083/2023/அ2)

| தீர்மான எண்:301 | நாள். 25.01.2023 |
|---|---|
| அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது | |

**<u>பொருள் 7</u>**

இந்நகராட்சிக்கு எதிராக சேலம் தொழிலாளர் நீதிமன்றம், மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சேலம் மாண்பமை உயர்நீதிமன்றம் சென்னை ஆகியவற்றில் நடைபெற்று வரும் வழக்கு மற்றும் புதியதாக நகராட்சிக்கு எதிராக தொடரக்கூடிய வழக்குகளுக்கு அரசு வழக்கறிஞர் வழக்கை ஏற்று நடத்துவதற்கு 'சி1 ' இருக்கை பிரிவுக்கு வழக்கு கட்டணம் வழங்கிட ஜனவரி 2023 முதல் டிசம்பர் 2023 வரை உத்தேச செலவினத்தொகையாக ரூ.100000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 0195/2023/சி1)

| தீர்மான எண்:302 | நாள். 25.01.2023 |
|---|---|
| அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது | |

**பொருள் 8**

இடைப்பாடி நகராட்சிக்கு சொந்தமான 'சி' கிரேடு பேருந்து நிலையத்தின் அங்கீகாரம் 12.10.2022 தேதியுடன் முடிவடைந்துவிட்டதால், மேற்படி அங்கீகாரத்தை 13.10.2022 முதல் ஓராண்டு புதுப்பிக்க வழங்க கோரி வட்டார போக்குவரத்து அலுவலர் அவர்களிடம் கோரப்பட்டது. அதன்படி மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை–1 அவர்களின் மேற்கண்ட பேருந்து நிலையம் நேராய்வு செய்யப்பட்டது. அதன் படி தாய்மார்கள் பாலூட்டும் அறை கதவு பழுதடைந்துள்ளதை சரிசெய்யவும், அறையை புதுப்பிக்கவும் மற்றும் பேருந்து நிலையத்தின் போதிய குடிநீர் வசதி செய்யவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.70,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவினத் தொகை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 421/22/இ2)

| தீர்மான எண்:303 | நாள். 25.01.2023 |
|---|---|
| அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது | |

**பொருள் 9**

சென்னை தலைமைச் செயலகத்தில் 13.08.2018ம் தேதியில் நடைபெற்ற 7–வது மாநில உயர்நிலை குழு கூட்ட பொருள் எண்.5–ன்படியும், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் கடிதம் ந.க.எண்.26888/UGSS2/2018–24 நாள்.29.01.2019–ன் படி இடைப்பாடி நகராட்சி மற்றும் அருகில் உள்ள மூன்று பேரூராட்சிகளான 1) கொங்காணாபுரம் 2) அரசிராமணி மற்றும் 3) பூலாம்பட்டி ஆகிய பேரூராட்சிகளின் கசடு கழிவுகளை நவீன முறையில் அப்புறப்படுத்த 30 KLD கொள்ளளவு கொண்ட கசடு கழிவு சுத்திகரிப்பு நிலையம் (Fecal Sludge Treatment Plant) ரூ.400.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டு 25.01.2021 அன்று மேற்காணும் 3 பேரூராட்சிகளுடன் கழிவு கசடு சுத்திகரிப்பு நிலையத்தை இயக்குதல் மற்றும் பராமரிப்பு செலவினம் குறித்து புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) மேற்கொள்ளப்பட்டது.

மேற்காணும் திட்டப்பணியில் கொமாரபாளையம் நகராட்சிக்குட்பட்ட கசடு கழிவுகளை நவீன முறையில் அப்புறப்படுத்த அரசாணை எண்.183 நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.31.12.2022, அரசாணை எண்.1 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.02.01.2023–ன் படியும் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களின் அறிவுரையின் படியும் கசடு கழிவு சுத்திகரிப்பு நிலையத்தில் ஏற்படும் பராமரிப்பு செலவினங்களில் பங்கு தொகை செலுத்தவும் சம்மதம் தெரிவித்தும் இடைப்பாடி நகராட்சியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) மேற்கொள்ள இசைவு கோரி நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையாளர்(பொ), கொமாரபாளையம் அவர்களின் அலுவலக கடிதம் ந.க.எண்.2980/2019/இ1, நாள்.13.01.2023ன் படி கோரியுள்ளார்.

எனவே, கொமாரபாளையம் நகராட்சியின் கசடு கழிவுகளை இடைப்பாடி நகராட்சிக்கு சொந்தமான கசடு கழிவு சுத்திகரிப்பு நிலையம் (Fecal Sludge Treatment Plant) மூலம் நவீன முறையில் அப்புறப்படுத்தவும் மற்றும் கழிவு கசடு சுத்திகரிப்பு நிலையத்தை இயக்குதல் மற்றும் பராமரிப்பு செலவினம் குறித்து புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்பட்டுகிறது.

**அலுவலககுறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்

(ந.எண்.1178/2018/இ2)

| தீர்மான எண்:304 | நாள். 25.01.2023 |
| --- | --- |
| அலுவலககுறிப்பு ஒத்திவைக்கப்பட்டது | |

**பொருள் 10**

இடைப்பாடி நகராட்சி 74வது குடியரசு தினவிழா கொண்டாட ஒலிபெருக்கி மற்றும் நாற்காலிகள் அமைக்கவும், பூமாலை, பழங்கள் மற்றும் பொன்னாடைகள் ஆகியவை வாங்கவும் ஆகும் உத்தேச செலவினம் தொகை ரூ.7000/—க்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்

(ந.எண்.178/2023/எச்1)

| தீர்மான எண்:305 | நாள். 25.01.2023 |
| --- | --- |
| அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது | |

**பொருள் 11**

இடைப்பாடி நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் 30 வார்டுகளில் தூய்மை பணிகள் செய்வதற்கு தற்போது 48 நிரந்தர தூய்மை பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். மேற்படி பணியாளர்களைக் கொண்டு பேருந்து நிலையம், நுண்ணுயிர் உரக் குடிலகள், வளர்மீட்பு மையங்கள், பொது கழிப்பிடம் மற்றும் சமுதாய கழிப்பிடங்கள், தெருக்கள் மற்றும் சாலைகளை தூய்மைப் படுத்துதல் மற்றும் இதர துப்புரவு பணிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் இந்நகராட்சியில் அனைத்து வார்டுகளில் உள்ள குடியிருப்புகள், வணிக நிறுவனங்கள் மற்றும் தொழிற் கூடங்களில் மக்கும் மக்காத குப்பைகள் என தரம் பிரித்து MCC (நுண்ணுயிர் உரக் குடிலகள்), RRC (வளர்மீட்பு மையங்கள்), ஆகிய இடங்களில் மக்கும் மக்காத குப்பைகளை சேர்ப்பிக்க போதுமான பணியாளர்களை கொண்டு துப்புரவு பணிகள் செய்ய தனியார் நிறுவனத்தின் மூலம் ஒப்பந்தம் அடிப்படையில் துப்புரவு பணி செய்வதற்கு பிரேரணை தயார் செய்து இவ்வலுவலக ந.க.எண் 1816/2021/எச்1 நாள்.26.12.2022—ல் கருத்துரு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

அதன்பேரில் இடைப்பாடி நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் 16248 குடியிருப்புகளிலிருந்து உருவாகும் மக்கும், மக்காத குப்பைகளை தரம் பிரித்து பெறுவதற்கு பணியாளர்கள் மற்றும் பேட்டரியால் இயங்கும் வாகனம் மற்றும் இலகு ரக வாகனம் ஆகியவற்றின் மூலம் குப்பைகளை சேகரித்து இந்நகராட்சி நுண்ணுயிர் உரக்குடில்கள் மற்றும் வளர் மீட்பு மையங்களில் கொண்டுவந்து சேர்ப்பதற்கு நாள் ஒன்றிற்கு உருவாகும் குப்பையின் அளவு 16.34 மெட்ரிக் டன்னுக்கு, ஒரு டன் அடிப்படையில் ரூ.4692.36 வீதம் ஓராண்டிற்கு ஆகும் மொத்த செலவு ரூ.334.50 இலட்சம் என்ற அடிப்படையில் மூன்றாண்டு காலத்திற்கு மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண்34638/2022/EA-2 SWM-3 நாள்.10.01.2023—இன்படி அனுமதி வழங்கி உத்திரவிடப்பட்டுள்ளது.

மேற்படி பணிகள் செய்ய அனுமதி வழங்கியதன்பேரில் மூன்றாண்டுகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி, தனியார் ஒப்பந்த நிறுவனத்தின் மூலம் துப்புரவு பணிகள் மேற்கொள்ள கீழ்க்கண்டவாறு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| நகராட்சியின் பெயர் | தினசரி உற்பத்தியாகும் குப்பையின் அளவு | ஒரு டன் குப்பையின் விலை விகிதம் ( ரூபாயில்) | தினசரி அடிப்படையில் மதிப்பீட்டு தொகை ( ரூ. இலட்சத்தில்) | வருடாந்திர அடிப்படையில் மதிப்பீட்டுத் தொகை ( ரூ. இலட்சத்தில்) | சரக்கு மற்றும் சேவை வரி 18% மற்றும் LWF 1%( ரூ. இலட்சத்தில்) | வருடாந்திர அடிப்படையில் மொத்த மதிப்பீட்டுத் தொகை ( ரூ. இலட்சத்தில்) |
| --- | --- | --- | --- | --- | --- | --- |
| இடைப்பாடி | 16.34 | 4692.36 | 0.77 | 281.10 | 53.40 | 334.50 |

மேலும் மேற்கானும் பணிகளை மேற்கொள்ள ஆகும் செலவு தொகை ரூ 334.50 மற்றும் ஒப்பந்த அறிவிப்பு பத்திரிக்கை விளம்பரம் போன்ற இதர செலவினம் ரூ2.00 இலட்சம் ஆக மொத்தம் ரூ336.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. மேற்படி திடக்கழிவு பணிகளை இந்நகரில் மேற்கொள்வதற்கு முதலாமாண்டு செலவிற்கு ஆகும் ரூ.336.50 இலட்சத்திற்கு நகராட்சியின் பொதுநிதி SUC மற்றும் 15வது மத்திய நிதிக்குழு Tied Grant ஆகிய நிதிகளில் இருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்

**(ந.க.எண்.1816/2021/எச்1)**

| **தீர்மான எண்:306** | **நாள். 25.01.2023** |
|---|---|
| அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது | |

<u>பொருள் 12</u>

இடைப்பாடி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரனா வைரஸ் பொதுமக்களிடையே பரவுவதை தவிர்க்கும் பொருட்டும் நகரில் பொது சுகாதாரத்தை மேம்படுத்தவும் தேவையான பாதுகாப்பு உபகரணங்கள் வாங்கி தயார் நிலை இருக்க ஏதுவாக பலவகைப்பட்ட இனங்கள் அவசர அவசியமாக கொள்முதல் செய்ய இந்நகராட்சி பலவகைப்பட்ட பொருள்கள் விநியோகம் செய்யும் ஒப்பந்ததாரரிடம் விலைப்புள்ளி மூலம் கொள்முதல் செய்ய ஆகும் உத்தேச செலவினம் தொகை ரூ2.00 லட்சத்திற்கு மன்ற அனுமதி வைக்கப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு:</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி செலவினத் தொகை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண் 528 / 2021 / எச்1

| **தீர்மான எண்:307** | **நாள். 25.01.2023** |
|---|---|
| அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது | |

<u>பொருள் 13</u>

இடைப்பாடி நகராட்சிக்குட்பட்ட சின்னமணலி அங்கன்வாடி மையத்தின் குழந்தைகள் நலன் கருதி சில்ரன் சாரிடபிள் டிரஸ்ட், கோயம்முத்தூர் அவர்கள் பாதுகாப்பு வேலி இலவசமாக அமைத்து தருவதாக முன்வருவதாக குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர்(பொ), எடப்பாடி அவர்களின் அலுவலக கடிதம் ந.க.எண்.1057/2022, நாள்.30.12.2022ல் தெரிவித்துள்ளார். மேலும், இப்பணி செய்திட உரிய அனுமதி வழங்க கோரியுள்ளார்

எனவே, மேற்காணும் சில்ரன் சாரிடபிள் டிரஸ்ட், கோயம்முத்தூர் அவர்களது சொந்த செலவில் சின்னமணலி அங்கன்வாடி மையத்திற்கு பாதுகாப்பு வேலி அமைக்க அனுமதி தருவது தொடர்பாக மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு:</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 57/23/இ2

| **தீர்மான எண்:308** | **நாள். 25.01.2023** |
|---|---|
| அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது | |

<u>பொருள் 14</u>

இடைப்பாடி நகராட்சிகுட்பட்ட வார்டு எண் 5,15 மற்றும் இதர பகுதிகளில் CGF/O&M Gap Filling Fund 2017-2018 திட்டத்தில் அனைத்து வீடுகளுக்கும் புதிய குடிநீர் இணைப்பு வழங்கும் பணி நடைபெற்று வருகிறது. இந்த திட்டப்பணியை விரைவாக முடிக்க பகிர்மானக்குழாய்கள் இல்லாதஇடங்களில் புதியதாக 3 இன்ச் பிவிசி பகிர்மானக்குழாய் அமைக்கும் பணிக்கு ஆகும் உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ, 5.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் குடிநீர் பணியின் அத்தியாவசியம் கருதி கொண்டு மேற்கண்ட பணியை ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு வழங்கி பணி மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு:</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கான செலவினைத் தொகையை நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் 40/2023/இ1)

| தீர்மான எண்:309 | நாள். 25.01.2023 |
|---|---|
| அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது | |

<u>பொருள் 15</u>

இடைப்பாடி நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையம் அருகில் உள்ள பிள்ளையார் கோவிலுக்கு பின்புறம் உள்ள இடத்தில் மழைநீர் வடிகாலை சிமெண்ட் Slab கொண்டு மாண்பமை சென்னை உயர்நீதி மன்ற உத்திரவு W.P.No.27025 /2017, நாள்.29.07.2022 உத்தரவின் படி வடிகாலின் மேல் பகுதியில் Concrate Slab அமைக்க உத்தேச மதிப்பீடு ரூ.60,000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்காலம்
2. மேற்கண்ட செலவு தொகையை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண். 2686 /2018/அ2

| தீர்மான எண்:310 | நாள். 25.01.2023 |
|---|---|
| அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது | |

<u>பொருள் 16</u>

இடைப்பாடி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.17, கோகிலா மொடிக்கல் எதிரில் உள்ள மழைநீர் வடிகால் வசதி முழுவதும் பழுதடைந்த உள்ளதால் அதை சீரமைக்கவும் மற்றும் வார்டு எண்.10, பெட்ரோல் பங்க் அருகில் உள்ள சாலையில் பருவமழை காலங்களில் அதிகமாக மழைநீரை வெயியேற்ற அருகில் உள்ள மழைநீர் வடிகால் வசதியுடன் இணைத்து மழைநீரை சீரான முறையில் வெயியேற்ற புதியதாக சிறுபாலம் அமைத்து தருமாறு நகரமன்ற உறுப்பினர்கள் கோரியுள்ளனர் எனவே, மேற்கண்ட பகுதியில் பழுதடைந்த நிலையில் உள்ள மழைநீர் வடிகால் வசதி மற்றும் புதியதாக சிறுபாலம் அமைக்க உத்தேச செலவினம் ரூ.4.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவு தொகையை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 1543/22/இ2

| தீர்மான எண்:311 | நாள். 25.01.2023 |
|---|---|
| அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது | |

ஆணையாளர்,
இடைப்பாடி நகராட்சி